# சார்பு நீதிமன்றம், அவிநாசி

## OS – 152/2025

நாள் – 16.03.2026

DW 1 – வெங்கடாசலம்

த/பெ –

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of March 2026.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. நான் சொல்வதுபோல 3ம் பிரதிவாதி ஆறுமுகத்திற்கு சொத்தை விற்று வந்த பணத்தை கொண்டுதான் கடன் அடைக்கப்பட்டதாக நான் சொல்லியுள்ளதை பொறுத்து அந்த கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. நான் பி.வா.சா.ஆ.56, பி.வா.சா.ஆ.57 ஆவணத்தில் கண்ட A.S No. 10/2016 வழக்கில் வழங்கிய தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக S.A No. 255/2020 என்று இரண்டாவது மேல்முறையீட்டு வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.13 கிரைய ஆவணத்தின் படி எனது தாத்தா அம்மாசைகவுண்டர் மற்றும் அவரது வாரிசுகளிடம் இருந்து நானும், எனது சகோதரர் வாதி மற்றும் எனது தாயார் கோவிந்தம்மாள் ஆகிய மூவரும் சொத்தை கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தில் அம்மாசைக்கவுண்டர் பூர்விக சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை, அந்த சொத்து அம்மாசைக்கவுண்டர், பெரியசாமிககவுண்டர் ஆகியோரின் சுயராஜ்ஜிய சொத்து.

2. பெரியசாமிகவுண்டரின் மனைவி பெயர் பொன்னம்மாள். அந்த பொன்னம்மாள் அம்மாசைக்கவுண்டரின் தங்கச்சி ஆவார். அம்மாசைக்கவுண்டர் குடும்பமும், பெரியசாமிக்கவுண்டர் குடும்பமும் ஒன்றாகத்தான் சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்றும், அதனால் அந்த சொத்து கூட்டுக்குடும்ப சொத்து என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2–13.01.1995ம் தேதியிட்ட பாகசாசனத்தில் பிதுரார்ஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று கண்டுள்ளது என்றால் சரிதான், வாரிசுகள் முறையில் பாத்தியப்பட்டது என்றும் சொல்லப்பட்டுள்ளது. அதனால் பிதுரார்ஜிதமாய் பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து எனது தாயார் எனது பெயருக்கு தான செட்டில்மெண்ட் ஆவணங்கள் எழுதிக்கொடுக்க அவருக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் அந்த செட்டில்மெண்ட் ஆவணங்கள் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல, எனது தாயார் அவரது சுயராஜ்ஜிய சொத்தைதான் எழுதிவைத்தார். அவ்வாறு எனது தாயார் எனக்கு சுயராஜ்ஜியமாய் பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது எனது தாயார் எனது பெயருக்கு எழுதி வைத்ததாக சொல்லப்படும் தான செட்டில்மெண்ட் ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

3. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.20ல் உள்ள முத்திரைத்தாள் எனது பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.20 அசல் ஆவணத்தை நான் 07.07.2015ம் தேதியில்தான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், ஏற்கனவே

அதனுடைய நகலை எனது எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்திருந்தேன். பி.வா.சா.ஆ.20 ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் வாதியினுடையது கிடையாது என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்திற்கு கடனே கிடையாது என்றும், வாதியின் பாகத்தை ஏமாற்ற வேண்டிதான் பி.வா.சா.ஆ.20 உடன்படிக்கை பத்திரத்தை மோசடியாக ஏற்படுத்திக்கொண்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.20 ல் கடன் கொடுத்தவர்களாக காட்டப்பட்டுள்ள 18 நபர்களில் 12 வது நபரான மகாலிங்கம் என்பவர் மட்டும்தான் வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த அ.வ.எண்.48/2017 வழக்கு இந்த நீதிமன்றத்தில் நடந்து வந்து கடந்த 11.03.2026 தேதியில் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான், அவருக்கு கொடுக்கவேண்டிய பணத்தை பொறுத்து தீர்ப்பு ஏற்படவில்லை. அதனால் மகாலிங்கத்திற்கு கடன் கொடுக்க வேண்டி உள்ளதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.20 ல் உள்ள மகாலிங்கத்தை தவிர மீதி 17 நபர்கள் எந்த ஒரு வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. பி.வா.சா.ஆ.20 உடன்படிக்கை ஆவணமானது மோசடியானது என்பதால்தான் அதில் கண்ட 17 நபர்கள் எந்த ஒரு வழக்கும் இதுநாள் வரையில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் பி.வா.சா.ஆ.20 உடன்படிக்கை ஆவணத்தின் பேரில் எந்த பரிகாரமும் நான் கோரமுடியாது என்றால் சரியல்ல. எனது தாயார் கோவிந்தம்மாள் இறந்துபோன பிறகு தாவா ஏ, பி செட்யூல் சொத்துக்களில் வாதிக்கும், எனக்கும் பொதுவில் 1/2 பங்கு வீதம் பாக பாத்திய உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் தாவா சி செட்யூல் சொத்தில் எனது தாய்மாமாவான 3 ம் பிரதிவாதி ஆறுமுகத்திற்கு பொதுவில் 1/3 பங்கு பாக

பாத்தியம் உண்டு என்றால் சரிதான். அதனால் தாவாபடி தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.03.16 15:16:50 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**